DINAMALAR

14 AUG 2022

PAGE 9

# பல்கலை கழகத்தில் தேசியக்கொடி ஏற்றி மரியாதை



சுதந்திரதினத்தையொட்டி, புதுச்சேரி பல்கலைக்கழக நிர்வாக கட்டடத்தில் தேசியக்கொடி ஏற்றும் நிகழ்ச்சியில் **துணைவேந்தர்** குர்மீத்சிங் பங்கேற்றார்.

**புதுச்சேரி, ஆக. 14–**

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில், 75வது சுதந்திர தினத்தை யொட்டி தேசியகொடி ஏற்றி மரியாதை செலுத்தப்பட்டது.

நாட்டின் 75வது சுதந்திர தினத்தையொட்டி, புதுச்சேரி பல்கலைக்கழக நிர்வாக வளாகத்தில் துணை வேந்தர் குர்மீத்சிங், தேசிய கொடி ஏற்றினார். துணை வேந்தர் இல்லம் மற்றும் பல்கலைக்கழக வளாக நுழைவு வாயில், வெள்ளி விழா வளாகம் உட்பட 12 இடங்களில் தேசியக் கொடி ஏற்றப் பட்டது.

புல முதன்மையர்கள், துறை தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள், பணியாளர்கள், மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இன்று (14ம் தேதி) காலை 10.00 மணிக்கு தேசபக்தி மற்றும் தேசிய கொண்டாட்டங்களை நினைவு கூரும் வகையில், சிறப்பு புகைப் பட கண்காட்சி, காணொளி காட்சி நடைபெறுகிறது.

நாளை (15ம் தேதி) தேசிய கொடியேற்றம், தேசபக்தி பஜனைகள், பகல் 12.30க்கு படைப்பிரிவு அதிகாரி, சென்னை, அதிகாரிகள் பயிற்சி அகாடமி, கமாண்டர் அபர்ணா ராய் பங்கேற்கும் சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெறுகிறது.